வகுப்பு : 11

தேர்வு X 1 1 2 0 6

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024 -25

நேரம் : 3.00 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி – I

குறிப்பு: அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14X1=14

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. பாயிரம் இல்லது ------ அன்றே.

அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

2. உங்ஙனம் என்ற சொல் எங்கு பயன்படுத்தப்படுகிறது

அ) மலேசியா ஆ) சிங்கப்பூர் இ) இலங்கை ஈ) தமிழகம்

3. "வான் பொய்த்தது" – என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள்.

அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை

இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

4. தொல்காப்பியம் குறிப்பிடும் புலன் என்னும் இலக்கிய வகைக்குச் சான்றாகத் திகழும் சிற்றிலக்கியம்.

அ) அந்தாதி ஆ) பரணி இ) பள்ளு ஈ) பிள்ளைத்தமிழ்

5. கூற்று 1 : புறநானூற்றின் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் ஜியு போப்

காரணம் 2 : ஓலைச்சுவடியில் இருந்த புறநானூற்றினை முதன் முதலில் அச்சில் பதிப்பித்தவர் உ.வே. சா ஆவார்.

அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி

இ) கூற்று 1 2 சரி ஈ) கூற்று 1 2 தவறு

6. பொருத்துக.

அ) கல்வி அழகே அழகு – 1. தொல்காப்பிய சிறப்புப் பாயிர உரைப்பாடல்

ஆ) இளமையில் கல் – 2. திருமந்திரம்

இ) துணையாய் வருவது தூயநற்கல்வி – 3. ஆத்திச்சூடி

ஈ) பாடல் போற்றல் கேட்டவை நினைத்தல் – 4. நாலடியார்

அ) 4 3 2 1 ஆ) 4 1 2 3 இ) 3 2 1 4 ஈ) 3 1 4 2

7. பகுபத உறுப்புகளுள் இடம் பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?

அ) பகுதி, விகுதி, இடைநிலை ஆ) பகுதி, இடைநிலை

இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி, விகுதி

8. காவடிச் சிந்துக்குத் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்



Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

40. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றினை எழுதுக.

*பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி*
*பேணி வளர்த்திடும் ஈசன்;*
*மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல*
*மாதர் அறிவைக் கெடுத்தார்.*
*கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்தி*
*காட்சி கெடுத்திட லாமோ?*
*பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்*
*பேதமை யற்றிடும் காணீர்.*

– பாரதியார்

41. பொதுவியல் திணையை எடுத்துக்காட்டுடன் விளக்குக. பொருண்மொழிக் காஞ்சித்துறையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

42. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.
அ) தன் கையே தனக்குதவி (அல்லது)
ஆ) சிறுதுளி பெருவெள்ளம்

43. "பேசு" என்னும் வேர்ச்சொல்லை வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் வினையாலணையும் பெயர்களாக மாற்றித் தொடரில் அமைத்து எழுதுக.

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3x6=18**

44. (அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டின் இயற்கை வளங்களை கூறுக.

(அல்லது)

ஆ) அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் என்பதை குறள் வழி விளக்குக.

45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரி.

(அல்லது)

ஆ) தாம் வாழ்ந்த காலகட்டத்தில் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.

46. (அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

## பகுதி – V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** **4+2=6**

47. அ) "அம்ம வாழி தோழி" எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) "நன்று"- என முடியும் குறள்.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

26.ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) புகழெனின் ஆ) அரும்பொருள்

27.இலக்கணக்குறிப்பு தருக

அ) மாநகர் ஆ) பந்தர்

28.வல்லின மெய்களை இட்டும், நீக்கியும் எழுதுக.

குமரனை பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு

29.தமிழாக்கம் தருக.

அ) Culture does not make people. People make Culture.

ஆ) Knowledge rules the World.

காது கேளாத மாணவர்களுக்கான வினா.

தொடரில் உள்ள பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கி எழுதுக.

அ) குமரனுக்கு பாஸ்போர்ட் கிடைத்தது விசா கிடைக்கவில்லை,

ஆ) பகலவன் நாளை நிச்சயம் வருவதாக உத்திரவாதம் கொடுத்திருக்கிறான்.

30.உவமை எவ்வவற்றின் அடிப்படையில் தோன்றும்?

## பகுதி – III

### பிரிவு–1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?

32.“ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி அறிவும் ஒழுக்கமும்

யாண்டுணர்ந்தனள் கொல்” – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33.தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச் சிந்து என்பதை விளக்குக.

34. அகநானூறு குறிப்பு வரைக.

### பிரிவு–2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

35.வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக?

36.“மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது” – என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

37.தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.

38.ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

### பிரிவு–3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x4=12

39. அ) வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்

துணைவலியும் தூக்கிச் செயல் – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

(அல்லது)

ஆ) வேற்றுமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.



Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

9. தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை

அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

10. திருக்குறளின் பெருமையினை விளக்கும் தொகுப்பு நூல் எது?

அ) திருவள்ளுவமாலை ஆ) நன்னூல் இ) தொல்காப்பியம் ஈ) பதினெண்கீழ்க்கணக்கு

11. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது

அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்

12. ஆனந்தரங்கருக்குத தொடர்பில்லாத குறிப்பு எது?

அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு

இ) தலைமைத்துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

13. சின்ன சீறா என்ற நூலின் ஆசிரியர் யார்?

அ) உமறுப்புலவர் ஆ) பனி அகமது மரைக்காயர்

இ) அபுல் காசிம் மரைக்காயர் ஈ) வள்ளல் சீதக்காதி

14. Document. Agreement ஆகிய சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் முறையே

அ) பண்பாடு , மாலுமி ஆ) கடவுச்சீட்டு, மதிப்புக்கல்வி

இ) ஆவணம், ஒப்பந்தம் ஈ) உப்பங்கழி, படையெடுப்பு

பகுதி – II

பிரிவு–1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3x2=6

15. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

16. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் செல்கிறது?

17. இங்கே, ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள் – எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?

18. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?

பிரிவு–2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x2=4

19. தமிழ்நாட்டின் மாநில மரம் – சிறுகுறிப்பு வரைக.

20. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

21. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

பிரிவு–3

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக. 7x2=14

22. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்கள் ஆக்குக.

கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்.

23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ) வலி வளி வழி (அல்லது) ஆ) குரை குறை

24. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:

பிண்ணாக்கு அல்லது தங்கை

25. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) மறுத்து ஆ) ஈன்ற



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com